# திருவருட் பயனில் பதியும் திருவருளும்

# Pathi and Thiruvarul in Thiruvarutpayan

***முனைவர் மு. செல்வக்குமார்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை

**Dr. M. Selvakumar**
*Assistant Professor*
*Department of Tamil*
*Thiagarajar College, Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*திருவருட் பயனில் பதியும் திருவருளும் பற்றிய கருத்தினையும் பதி பற்றிய சித்தாந்தக் கொள்கைகள், திருவருள் விளக்கம், பதிக்கும் திருவருளுக்குமுள்ள தொடர்பு ஆகியவற்றை விளக்கியும்நிற்கிறது. திருவருள்என்பதுஉயிர்கள் உய்ய வேண்டும் என்று இறைவன் கொண்ட பெருங்கருணை என்று விளக்குகிறது. இது காரணமாகவே இறைவன் உயிர்களைப் படைந்த காலத்தே ஒடுங்கச் செய்து மீண்டும் வினைகளுக்கு ஏற்ப பிறவியைத் தருகிறான். திருவருள் என்பதற்குக் குறிப்பான ஒரு விளக்கம் இல்லை. திருவருள் செயல்களைவைத்தேதிருவருள்யாது? என்பதனை அறிய முடிகிறது. பதியின் ஐந்தொழில்களுள் ‘மறைத்தல்’ தொழிலே திருவருளாகக் கொள்ளலாம் என்று திருவருட்பயன் கூறுவதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

***முக்கியச்சொற்கள்:*** *திருவருட்பயன், சைவசித்தாந்தம், இறைவனின்அருள்திறம், திருவருளின்தனித்தன்மை.*

## Abstract

*Thiruvarutpayan also explains the concept of Pathi and Thiruvarul, the ideological principles behind it, the description of Thiruvarul, and the relationship between Pathi and Thiruvarul. Thiruvarul means the grace of the Lord to save lives. It is because of this that the Lord condenses life when it is tired and gives birth again according to the actions. Thiruvarul does not have a specific definition. What is Thiruvarul based on his actions? It can be known that The purpose of this article is to examine Thiruvarutpayan's claim that the profession of 'hiding' can be regarded as a master among the five professions of Pathi.*

***Keywords:*** *Thiruvarutpayan, Saiva Siddhantham, Iraivan Thiruvarulin Thanmai*

**Citation**

Selvakumar, M. “Pathi and Thiruvarul in Thiruvarutpayan.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 79–86.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20096739*

**முன்னுரை**

*உலகிலுள்ள எல்லாச் சமயங்களுமே இவ்வுலகை ஆக்கியளித்து ஆசுடன் அடங்கப் போக்கும் ஒரு மூவா முதல்வனைப் பரம்பொருளாகக் கொண்டே அமைந்துள்ளதுள்ளன. சமயங்களனைத்தும் தத்தம் சமயக்கொள்கைகளுக்கேற்ப கடவுள் அமைந்துள்ளது என பெயர்கள் மூலமாகவும், சமயக்கொள்கைகள் மூலமாகவும் வேறுபடுத்திக்காட்டுகின்றன. சைவத்திற்குச் சிவனும், வைணவத்திற்குத் திருமாலும், கிறித்துவத்திற்கு ஏசுகிறித்துவும், இசுலாமியத்திற்கு அல்லாவும் எனப் பெயர்களும் வெவ்வேறுவகையில் அமைந்துள்ளன. தமிழகத்திற்கே உரித்தாக சிறப்புடைய சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் பரம்பொருளின் பெயர் பதி என்பதாகும். இப்பெயர் வேறு எச்சமயத்திலும் அழைக்கப்படாத பெயராகும். இப்பதிக்கே உரித்தான குணங்கள் சிலவற்றைத் திருவருட் பயனில் பறைசாற்றுகிறது. அது மட்டுமின்றி, திருவருள் பற்றி இந்நூல் கூறும் முக்கியக்கருத்துகளும் இக்கட்டுரையில் ஆராய்படுகிறது.*

**பதி பற்றிய சித்தாந்தக்கொள்கைகள்**

**பதி விளக்கம்**

*பதி என்பது கடவுள்., தலைவன், கணவன் எனப் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகும். கடவுள், ஐம்பொறிகளுக்கு எட்டாதவன், தலைவன், சித்தாந்தத்தில் கூறப்படும் முதன்மையான தன்மையன் (முதற்பொருள்), கணவன், அருட்சக்தியாகிய அம்மையின் ஆருயிர்க் கணவன். பதி என்ற சொல் பசுபதி என்ற சொல்லின் குறுக்கம். தேவேந்திரன் என்ற சொல் எவ்வாறு இந்திரன் என்று சுருக்கமாகக் குறிக்கப்படுமோ அதுபோல பசுபதி என்ற சொல்லே பதி எனக் குறிக்கப்படும் (கங்காதரன், ச., சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள், ப.41) என்கிறார். டாக்டர் கங்காரன். பதி என்பதற்கு, ‘ காப்பவன்’ என்பது பொருள், தன் கீழ் உள்ளவரை நல்ல வகையில் ஆவன செய்து காப்பவன் தலைவனாதலின், ‘பதி’ என்பது ‘ தலைவன்’ என்ற கருத்தில் வழங்கப்படுகின்றது. இதனைத் தமிழில் ‘ ஆண்டான்’ என்று கூறலாம். ‘ ஆண்டவன்’ எனவும் நாட்டில் வழங்குகின்றது (அருணை வடிவேல் முதலியார், சி., முப்பொருள் இயல்பு, பக். 65-66.) என்ற சொல் விளக்கமும் நோக்கற்குரியது.*

**நிகரில்லாதவன்**

*திருவருட்பயன், சித்தாந்தக் கருத்துக்களை எளிதிற் விளங்கிக் கொள்வதற்காக மட்டுமே ஆக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பதியின் உயரிய குணங்களையும், அவன் அருளாகிய சக்தியின் மேன்மைகளையும், உயிர்களின் இழிதகைமைகளையும் விளக்கிக் கூறவே படைக்கப்பட்டதாகத் தெரிகிறது. உமாபதியார், இந்நூல் முழுவதும் மறைமுகமாகவும் குறிப்பாகவும், நேரடியாகவும் விளக்கியிருப்பது பதியையும் திருவருளையும் பற்றியே என்பதை இந்நூலினை நுண்ணிதின் நோக்குவார்க்குப் புலனாகும். பதி, அகர உயிரெழுத்துப் போல அறிவே ஆகி, தனக்கு நிகரில்லாதவனாகஎங்கும் நிறைந்து நிற்கும் இயல்புடையவன் திருவருட்பயனும், பதியின் இப்பெருமைசால் இயல்பையே முதலில் காட்டுவதாக உள்ளது.*

***அகர உயிர்போல் அறிவாகி எங்கும்***
***நிகரிலிறை நிற்கும் நிறைந்து*** **(திருவருட்பயன், பா.எ.1.)**

**பின்னமிலாதவன்**

***அப்பதி, தன்னிலைமையை மன்னுயிர்கள் சாரு மாறு தருகின்ற தனது அருட்சத்தியோடு நீக்கமின்றி நிற்பவன் ஆவான்.***

***தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சத்தி***
***பின்னமிலான் எங்கள் பிரான் (திருவருட்பயன், பா.எ.2.)***

*பதி முதுநிலை என்ற முதல் அதிகாரத்தில் பதியின் குணங்கள் காட்டப்பட்டுள்ளன. முதல் குறட்பாவில் பதியைப் பற்றி காட்டிவிட்டு அடுத்து ஏனைய பிறகுணங்களைக் காட்டாது திருவருள் பற்றியே காட்டப்பட்டிருப்பது நோக்கற்குரியது. இஃது பதிக்கும் அவனது சத்திக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது. பதிக்கு அடுத்த நிலையில் நிற்பது அவனது திருவருளே என்ற கருத்தும் இதனால் நன்கு புலனாகும்.*

**ஐந்தொழில்கள்**

*சைவசித்தாந்தத்தில், பதியின் தொழில்களாகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்ற ஐந்தும் கூறப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்றும் உயிரற்ற சடப்பொருள்களுக்காகச் செய்யப்படுவன. மறைத்தலும் அருளலும் உயிருள்ள பொருள்களுக்காகச் செய்யப்படுவன. இறைவன் தம் ஐந்தொழில்களுள் ஒன்றாக 'அருளல்'' தொழிலையும் செய்கிறான். அதிலும் உயிருள்ள பொருள்களுக்காகவே செய்யும் தொழிலாக அதுகருதப்படுகிறதெனின், இறைவன் உயிர்களுக்குச் செய்யும் அளித்தல் எத்தகையது என்பதை ஈண்டு உணரமுடிகிறது. இதையே திருவருட்பயன்.*

***ஆக்கியெவையும் அளித்து ஆசுடன் அடங்கப்***
***போக்குமவன் போகாப் புகல் (திருவருட்பயன், பா.எ.4.)***

*என்ற குறட்பா விளக்குகிறது.*

**மூவகைத் திருமேனிகள்**

*இத்தகைய அருங்குணங்களையுடைய இறைவன், உருவமுள்ளவனா, உருவ மற்றவனா என்ற வினாவிற்கு இந்நூல் விடை பகர்கின்றது. சித்தாந்தத்தில், அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று வடிவங்களைத் தாங்கிவந்து, இறைவன் உயிர்களுக்கு அருள புரிகிறான் எனக் கூறப்படுகிறது. இக்கருத்தையே கூறும்,*

***அருவம உருவும் அறிஞர்க்கு அறிவாம்***
***உருவம் உடையான் உளன் (திருவருட்பயன், பா.எ.5.)***

*என்ற குறட்பாவிற்குத் திரு. சி.சு.மணி,*

***மெய்ஞ்ஞானிகளுக்கு அறிவே உருவான திருமேனி***
***தாங்கியும் மற்றவர்களுக்கு அருவமும், உருவமும்,***
***அருவுருவமும் ஆகிய திருமேனிகளைத் தாங்கியும்***
***முதல்வனாகிய இறைவன் அருள்பாலிப்பான் (மணிசி.சு.திருவருட்பயன்,ப.14.)***

*என்ற உரை விளக்கம் தருகிறார்.*

**தலைமையுடையவன்**

*உயிர்கள் அறிவிக்க அறியும் இயல்புடையன. அதுபோலவே இறைவனுக்கும் அவனின் மேலோன்ஒருவன்அறிவிக்கிறானோஎனவினவுவார்க்குவிடையளிக்கிறது. இந்நூல் இறைவன் தனக்கு ஒப்பாரும்மிக்காருமின்றி அறிவே வடிவாகித் திகழ்கின்றவன் பூரண அறிவே வடிவமாகி நிற்பவன் ஆவான்.*

**அடியார்க்கு எளியன்**

*இறைவன், தன் அடியார்களுக்கு எளியன், அடியாரல்லதார்க்கு தேவர்களேயாயினும் எட்ட முடியாத தொலைவிலுள்ளவன். தன்னிடம் அன்பு கொண்டு தவறாது வழிபடும் அடியார்களுக்கு விரைவில் காட்சி தரக்கூடியவன். தன்னை வணங்காதவர்களுக்கு தேவர்களேயாயினும் அறியமுடியாத தன்மையன் ஆவான்.*

**சங்கரன்**

*தன்னை அடைந்தார்க்கு அருள்புரிவான். அடையாதார்க்கு அருளை வழங்கான், ஆயினும் தன்னை வழிபடுவதால் அடியார்மேல் விருப்பும், வழிபடாமையால் வெறுப்பும் கொள்ளாது என்றும் ஒரே தன்மையனாய் நின்று நன்மையையே விளைவிப்பதால், 'சங்கரன்" என்ற சிறப்பான பெயரைக்காட்டுகிறது. திருவருட்பயன், சம்-நலம், கரன்-கொடுப்பவன், நலத்தைக் கொடுப்பவன்.*

***நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன***
***சலமிலன்பேர் சங்கரன்***
***(இராமநாதன் பிள்ளை, .மெய்கண்டசாத்திரம் பதினான்கு பகுதி-2, பா.எ.9.)***

**பவம் தீர்ப்பவன்**

*உயிர்களைப் பிணித்திருக்கும் ஆணவ மலத்தின் ஆற்றல் சொல்ல முடியாது. இறைவனின் திருவருள் மருந்தாலன்றி வேறு எந்தவொரு மருந்தாலும் தீர்க்க முடியாதது. இம்மலநோய், இம்மலம் அகல, உயிர் தூய்மை பெற்று பிறப்பறுத்து வீடுபெறும். இறைவன் தன்னுடைய திருவருளால் மலத்தைத் தீர்ப்பதோடு மட்டுமல்லாமல் பிறப்பறுத்து முத்தியும் கொடுப்பான்.*

***இந்நோக்கங் கருதியே உமாபதியார்,***
***உன்னுமுளதையம் இலதுணர்வாய் ஒவாது***
***மன்னுபவம் தீர்க்கும் மருந்து (திருட்வருட்பயன், பா.எ.10)***

*என்ற குறட்பாவில் மலம் தீர்க்கும் மருந்து எனக் கூறுவது, பவம் தீர்க்கும் மருந்து எனக் குறிப்பாகக் காடடியிருக்கிறார்.*

**திருவருள் விளக்கம்**

*அருள் என்பதற்குக் கருணை, சத்தி என்று பொருள் கூறப்படும்.*

**கருணை**

*கருணை என்று கொள்கையில், உயிர்கள் உய்ய வேண்டுமென்று இறைவன் அவைகள்*

*மேல்கொண்ட கருணை எனப் பொருள்படுகிறது. உயிர்கள் வினைப்பயனை நுகர்தற் பொருட்டு உலகில் பிறந்திறந்து துன்புறுகின்றன. உயிர்களைப் பிணித்திருக்கும் ஆணவமலமோ அளவற்ற ஆற்றலுடையது. அதை, அகற்றித் தம்மைத் தூயதாக்கிக்கொள்ளும் சத்தி இயல்பாகவே உயிர்களுக்குக் கிடையாது. அவவாறு துன்புறும் உயிர்களுக்கு இறைவன் அளிக்கும் ஒரு 'நற்கொடையே' திருவருள் ஆகும்.*

*சைவ சமயத்தில் இறைவனது திருவருள் என்பது கருத்து மிக்கசிறப்பான இடம் வகிக்கிறது. திருவருள் என்பது உயிர்கள் உய்யவேண்டும் என்று இறைவன் கொண்ட பெருங்கருணை. இது காரணமாகவே இறைவன் உயிர்கள்களைப் படைந்த காலத்தே ஒடுங்கச்செய்து மீண்டும் வினைக்கேற்பப் பிறவியைத் தந்துமாயையிலிருந்து தனுகரணபவன போகங்களைத் தோற்றுவித்து வினையருந்தச் செய்கிறான். உயிர்கள் வினையை அனுபவித்து முடிக்க வேண்டும் ஆணவ மலபந்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதே இதன் நோக்கம் (அருணாசலம்மு., சைவசமயம், பக். 124-125.)*

**சத்தி**

*சத்தி என்று கொள்ளுகையில், இறைவனுடன் நீக்கமின்றி நிற்கும் அம்மையையும் இறைவனுடைய ஆற்றலையும் (திருவருள்) குறிக்கிறது. இறை உண்மையை நாம் உணர்ந்து கொள்வதற்குச் சிறந்த சாதனமாக அமைந்துள்ளதே இறைவருள் என்பர் இதனைப் பொதுவாக அருட்சத்தி என்றும் சிறப்பாகச் சிவசக்தி என்றும் கூறுவர். சிவசக்தி சிறப்புற்றமைக்கு காரணம், சிவமும் சத்தியும் இருவேறு பொருள்களல்ல என்ற உண்மை வலியுறுத்தப்பட்டது.*

*பிரபஞ்சக் காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணமே சிவசத்தியாகும். அதனால்தான் சித்தாந்திகள் அருட்சத்திக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளனர். அருட்சத்தி என்பது இறையருள் (முத்துராமன், சைவசித்தாந்தம், ப.96.) எனக் கூறுவார் டாக்டர் முத்துராமன்.*

**மறைத்தலும் அருளே**

*திருவருள் என்பதற்குக் குறிப்பாக யாதொரு விளக்கமும் திருவருட் பயன் தரவில்லை. திருவருளின் செயல்களை வைத்தே திருவருள் யாது என்பதை அறிய முடிகிறது. சித்தாந்தத்தில், பதியின் ஐந்தொழில்களுள் ஒன்றாக மறைத்தல் கூறப்படுகிறது. மறைத்தல் என்பது உயிர்களின் நன்மையின் பொருட்டு அவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து நடத்துவதாகும் பக்குவம் வராதபோது பாசத்தின் வழியே நின்று மறைத்தலைச் செய்த அதே சத்திதான், பக்குவம் வந்தபோது அருட்சத்தியமாக மாறி நன்மை செய்வது. எனவே மறைப்பாற்றலையும் திருவருளாகவே கொள்ளலாம்.*

**உயரிய அருள்**

*திருவருள், இறைவனிடம் பக்தி கொண்டார்க்கே அளிக்கப்படுவது, பக்தி இல்லாதார்க்குக் கிடையாது எனக்கூறப் படுகின்றது. இவையெல்லாம் இறைநம்பிக்கை இல்லாதாரால் உருவாக்கி விடப்பட்ட போலிச் சான்றுகளாகும். சித்தாந்தத்திலோ, எல்லா உயிர்களையும் காப்பது இறைவனுடைய திருவருளே எனக்கூறப்படுகிறது. இந்நிலையில் திருவருளின் உயர்வு நன்கு புலனாகும். இவ்விடத்தே டாக்டர். முத்துராமன் கூறும் கருத்து நினைவுகூறத் தக்கது.*

*இறையருள் நம்மிடம் பக்தி கொண்டவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும் அனுக்கிரமன்று, இவ்வுண்மையை வலியுறுத்தும் முறையில் தான் 'அருள்' என்னும் அற்புதச் சொல்லைப் பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் அமைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தகும். 'அன்பு' என்ற சொல்லைவிட 'அருள்' என்ற சொல் ஆழமான பொருளைக் கொண்டது என்பதும் கவனிக்கற்பாலது (அருணைவடிவேல் முதலியார். சி.,முப்பொருள் இயல்பு, பக். 65-66.) திருவருள் விளங்குமிடம்.*

*உயிர்களுக்கு இறைவனால் அளிக்கப்படும் வரப்பிரசாதமாகிய திருவருள் எப்போதும் இறைவனிடத்திலேயே தங்கியுள்ளதா? அது எப்படிப்பட்டது? என்பதற்கெல்லாம் திருவருட்பயன் விளக்கம் தருகின்றது. இறைவன் எங்கும் எப்பொருளிலும் இருக்கிறான் என்பது உண்மை. அவ்வாறிருக்க, அவ்விறைவனுடன் என்றும் நீக்கமின்றி நின்று செயற்படுவதாகிய திருவருளும் எங்கும் பரந்திருக்கிறது எனக்கூறின் அது மிகையாகாது.*

***தாயுமானவர் சுவாமிகளும்,***

***அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்***
***ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது***

***(இராமநாதன் பிள்ளை, ப., தாயுமானவடிகள் திருப்பாடல்கள், பா.எ.1 1-3.)***

*என்று பாடுவதிலிருந்து மேற்குறிப்பிட்ட கருத்தைத் தெளியலாம். இக்கருத்தையே*

***திருவருட்பயனும்***

***பெருக்க நுகர்வினைப் பேரொளியாய் எங்கும்***
***அருக்கன் என நிற்கும் அருள்***

***(இராமநாதன் பிள்ளை, ப., மெய்கண்டசாத்திரம் பதினான்கு, பா.எ.32.)***

*என்று கூறுகிறது. இக்குறட்பாவிற்குத் திரு.சி.சு.மணி,*

*புறவுலகத்தை நடத்தும் கதிரவனைப்போல, உயிர்கள் வினைகளை ஈட்டுவதற்கும், நுகர்வதற்கும் துணையாக அகப்பேரொளியாய் இறைவன் திருவருள் எங்கும் நிறைந்து நிற்கும் (மணி.சி.சு., திருவருட்பயன், ப.எ.44) என்று விளக்கவுரை நல்கிறார்.*

**பேரொளி**

*திருவருள் ஒரு சாதாரண சோதிபோலல்லாமல் சில நாட்களே ஒளி வீசும் நிலவைப் போன்றில்லாமல், குறிப்பிட்ட சிலராலேயே காணக்கூடியது மல்லாமல், காலை முதல் மாலை வரைபெரும்ஒளிவீசும்கதிரவனைப்போல இவ்வுலகம்முழுவதும்பரவிக்கிடக்கிறது. இத்தகைய திருவருளையங் சுட உய்த்துணர்ந்து அறியாமல், உயிர்கள் மயங்குகின்றன இதையே திருமூலரும்,*

***தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்***
***ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை***

***(இராமநாதன் பிள்ளை. பா.ஈ (தொகு.) பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு, பா.எ.2687 1-2,)***

*என உயிர்கள் மேல் இரக்கந்தோன்றப்பாடுகிறார். எனவே, உயிர்கள் எங்கும் பரந்துநிற்கும இத்திருவருளை அறிந்து அதையே துணையாகக்கொண்டு பிறப்பறுத்து, வீடுபேற்றைப் பெற முயல்வதே சிறந்த வழி என்ற கருத்தைச் சொல்லாமலேயே புரிய வைத்துள்ளார் உமபதியார்.*

**பதிக்கும் திருவருளுக்கும் உள்ள தொடர்பு**

*சித்தாந்தத்தில், ஒரு பொருளுடன் மற்றொரு பொருளுக்கு உள்ள தொடர்பு கூறப்படுவது சிறப்பிற்குரியதாகும். இந்நிலையில் பதிக்கும் திருவருளுக்கும் உள்ள தொடர்பு யாது எனக் காண்டல் தகும். திருவருட்பயன், பதிக்கும திருவருளுக்குமுள்ள தொடர்பைக் குறிப்பாக ஒரிடத்தில் சுட்டிக்காட்டியதோடு அமைகிறது. அத்தொடர்பின் பெயரைக் குறிப்பிடவில்லை. சித்தாந்தத்தில் பதிக்கும் திருவருளுக்கு முள்ள தொடர்பு (சம்பந்தம்) தாதான்மியசம் பந்தம் என்று கூறப்படுகிறது. ஈண்டுதாதான்மியம் என்து ஒன்றுபட்டிருக்கையாகும். அஃதாவது, அருளும் பதியும் ஒன்றுபட்டிருத்தல் ஆகும். அருளின்றிப்பதியில்லை. பதியின்றி அருளில்லை. இதையே சித்தியாரும்,*

***அருளது சத்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித்***
***தெருள்சிவம் இல்லை அந்தச்சிவ மின்றிச் சக்தியில்லை***
***(இராமநாதன்பிள்ளை, ப. மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, பகுதி-I சிவஞானசித்தியார், சுபக்கம், சூ.எ.5.)***

*எனக்காட்டுகிறது.*

*முதல்வனுக்கு உயிர்களின் பாசப்பிணிப்பை நீக்கிச்சிவத்துவ விளக்கம் எனப்படும் பேரின்ப நுகர்ச்சியைக் கொடுக்க வேண்டும் என்னும் இரக்கம் இயல்பாக உண்டு. அவ்விறக்கமே சக்தி (ஆற்றல், வல்லமை) சத்தியும் சிவமும் உடம்பு மகையும் போலவும் ஞாயிறும் ஒளியும் போலவும் தாதான்மிய (ஒன்றன் இருமை) சம்பந்தத்தான் இயைந்துநின்றலின், யாண்டும் பிரிப்பின்றியே நிற்கும் இவ்வுண்மையை முதல்வன் அருளே கண்ணாகக் கண்டவர்கள் உணர்வர் (வச்சிரவேல் முதலியார், க., சைவசித்தாந்தத்திறவு, மதுரை காமராசர் பல்கலைக்ககழகம், மதுரை 1980.) என இச்சம்பந்தத்தை விளக்கிக்காட்டுகிறார். திரு.வச்சிரவேல் முலியார்.*

**முடிவுரை**

*பதிக்குரிய சில சிறப்புக்குணங்கள் அறியப்பட்டன. இறைவனின் கருணை, சக்தியே திருவருள், மறைத்தலும் ஒரு வகையில் அருளேயாகும். இறைவனை போலவே இத்திருவருளும் எங்கும் பேரொளியாய்க் காணப்படுகிறது. பதிக்கும், திருவருளுக்கும் உள்ள தொடர்பு, தாதான்மியசம் பந்தம் ஆகும்.*

**துணை நூற்பட்டியல்**


1. *அருணாசலம். மு,சைவசமயம்,(1969),184 பிராட்வே, சென்னை - 108*
2. *அருணாசலம்.மு,தமிழ் இலக்கியவரலாறு,(1969),14-ஆம் நூற்றாண்டு காந்திவித்தியாலயம், தஞ்சை.*
3. *கங்காதரன். ச.,சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள்,(1980), அங்கயற்கண்ணி அகம், மதுரை.*
4. *குமரகுருபரன் பிள்ளை.டி.எம்., திருமந்திரம், (1960), குமரகுருபரர் சுவாமிமடம் , ஸ்ரீ வைகுண்டம்.*
5. *சங்கரன் பிள்ளை.பொ.,சைவசித்தாந்தம்,(1985), குமரன் பதிப்பகம், சென்னை.*
6. *மணி.சி.சு.,திருவருட்பயன் தெளிவுரை,(1987), அருந்நந்திசிவம் அருட்பணிமன்றம், நெல்லை.*
7. *முத்துராமன், சைவசித்தாந்தம்,(1975), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை*

**References**


1. *Arunachalam. Mu, Saiva Samayam, (1969), 184 Broadway, Chennai & 108.*
2. *Arunachalam. Mu, History of Tamil Literature, (1969), 14th Century Gandhi Vidyalayam, Thanjavur.*
3. *Gangadharan. Ch., Basic Principles of Saivism, (1980), AngayakanniAgham, Madurai.*
4. *Kumaraguruparanpillai. T.M.,Thirumandram, (1960), Kumaraguruparar Swamy Madam, Srivaikundam.*
5. *Mani. C.S. ,Thiruvarutpayan Theliurai, (1987), Arunnandi Shivam, Arudapani Mandra, Nellai.*
6. *Muthuraman, Saivasidthantam, (1975), Tamil Nadu Text Book Institute,Chennai.*
7. *Sankaranpillai. B., Saivasiddhantham, (1985), Kumaran Publishing House, Chennai.*